

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 331 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 28 – ஞாயிற்றுக்கிழமை 12 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 331 : Thiruvalluvar Year - 2057 - Aani 28 - Sunday 12 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### கட்டணமில்லாப் பேருந்துகளைக் குறைத்து – சரிவர இயக்காமல்

# மகளிர் விடியல் பயணத் திட்டத்தைச் சீர்குலைக்கும் த.வெ.க. அரசு!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 12 -**

**மகளிர் விடியல் பயணத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டு வரும் த.வெ.க. அரசு, சென்னையில் கட்டணமில்லா பேருந்துகளை சரிவர இயக்குவதில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.**




கடந்த தி.மு.க. ஆட்சியில் மகளிர் விடியல் திட்டத்தின்கீழ் கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது த.வெ.க. அரசு, பல்வேறு வழித்தடங்களில் மகளிர் விடியல் பேருந்துகளை சரிவர இயக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில், ஆயிரத்து 724 பேருந்துகள் இயக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 23/6/2026 அன்று வெளியாகியுள்ள தினந்தோறும் இயக்கப்படாத பேருந்துகள் பட்டியலில் 162 கட்டணமில்லா மகளிர் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், மாநகர போக்குவரத்து கழகம் தினந்தோறும் இயக்கப்படாத பேருந்துகள் பட்டியல்கள் வெளியிடுவது வழக்கம். ஆனால், இந்த பட்டியல்கள் வெளியே பரவும் என்பதால் தற்போது அந்த பட்டியல் கடந்த ஒரு வாரமாக வெளியிடாமல் பணியாளர்களுக்கு வாய்மொழியாகவே தெரிவித்து வருவதாக கூறப்படுகிறது.

இதனால், அன்றாடம் பணிக்குச் செல்லக்கூடிய பெண்களுக்கு வரபிரசாதம் போல் இருந்த கட்டணமில்லா பேருந்து பயணம், தற்போது பேருந்துகள் சரிவர இயக்கப்படாததால் பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

# 285 நாள் மவுனம், கரூர் இடைத்தேர்தல் ஸ்டண்ட் !

## தி.மு.க. ஐ.டி.விங் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 12 -**

**கடந்த ஆண்டு கரூரில் மதியம் 12 மணிக்கு நடக்க வேண்டிய நிகழ்விற்கு, இரவு 7 மணி வரை மக்களைக் காக்க வைத்து, தண்ணீர் மற்றும் உணவு இன்றித் தவித்த கூட்டத்திற்குள் அனுமதி மீறி வாகனத்தைச் செலுத்தி நெரிசலை ஏற்படுத்தியது த.வெ.க.வின் பொறுப்பற்ற விளம்பர மோகம்.**

குழந்தைகள் மற்றும் பெண்கள் எனப் பல உயிர்கள் பலியான போது, பொறுப்பின்றி அங்கிருந்து ஓடி மறைந்த விஜய், 285 நாட்கள் கழித்து இன்று அதே இடத்திற்குச் செல்வது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்யும் துரோகம்.

ஆட்சிக்கு வந்தவுடன் உண்மையை மறைக்க 19 காவல் அதிகாரிகளை இடமாற்றம் செய்ததோடு, இன்று பலியானவர்களின் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்குவதாக அறிவித்திருப்பது தங்களின் குற்றத்தை மறைக்கப் பயன்படுத்தும் மலிவான வாக்குக்கமிஷன்நாடகம்.

குதிரை பேரத்தில் வாங்கப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வின் தொகுதியில் இடைத்தேர்தலை வெல்ல, உயிரிழந்தவர்களின் ரத்தத்தின் மீது நின்று அரசியல் செய்வது விஜய்யின் அதிகாரத் திமிரையும், நிர்வாகச் சீர்கேட்டையும் அப்பட்டமாகக் காட்டுகிறது.

என்னை வரவிடாமல் தடுத்தனர் என்று மேடையில் அழும் நாடகத்தை நிறுத்திக் கொள்ளுங்கள். அங்கிள் விஜய் அவர்களே; உங்கள் கைகளில் படிந்திருக்கும் ரத்தக் கறை, அரசு வேலை கொடுக்கும் இந்த இடைத் தேர்தல் ஸ்டண்ட் நாடகத்தால் என்றும் மறைந்துவிடாது.

### இன்று போல் அன்றும் நேரத்திற்கு வந்திருந்தால் உயிரிழப்பே இருந்திருக்காது:

# ஜோசப் விஜயின் முதுகுதான் கரூர் மக்களின் நினைவுச் சின்னம்!

## முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பதிலடி

**சென்னை, ஜூலை 12 -**

**விஜயின் முதுகு தான் கரூர் மக்களின் நினைவுச்சின்னம். இன்று போல அன்றும் நேரத்திற்கு வந்திருந்தால் உயிரிழப்பே நடந்திருக்காது. ஜனநாயகன் பட இசை வெளியீட்டு விழாவில் மகிழ்ச்சியோடு நடனம் ஆடிவிட்டு.. வலி வேதனையா.? நீங்க ரொம்ப "டீ ஆத்துறீங்கன்னு" மக்களுக்கு தெரியும் என்று கரூரில் முதல்வர் விஜய் பேசிய பேச்சிற்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலடி கொடுத்துள்ளார்.**

அவரது பேட்டி வருமாறு:

இன்று கரூருக்கு சென்று பேசி உள்ளார் முதல்வர் விஜய். சில நாட்கள் முன்பு இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்காக திருச்சி கிழக்கிற்கு சென்றிருந்தார் முதல்வர் விஜய். இன்று திருச்சியில் இருந்து கரூர் சென்றதை போல அன்றே கரூர் சென்றிருக்கலாம். ஆனால் அப்போது போகவில்லை. அதற்கு காரணம் ஷோபா மாடல் கட்சியில் கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர் இணையட்டும் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்யட்டும். அதன் பின் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்லலாம் என விஜய் காத்திருந்தார்.

அன்று திருச்சிக்கு போனதிற்கு காரணம் இடைத்தேர்தல் இன்று கரூர் சென்றதற்கு காரணம் இடைத்தேர்தல். அந்த இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் எம்.ஆர் விஜய பாஸ்கரை அருகில் வைத்து கொண்டு ஊழல் பற்றி எல்லாம் பேசுகிறார். 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நில அபகரிப்பு வழக்கில் தலைமறைவாக இருந்து கைது செய்யப்பட்டவர் தான் இந்த விஜயபாஸ்கர். விராலிமலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கரை குட்கா வழக்கு விசாரணைக்கு வர சொல்லி உள்ளது நீதிமன்றம். இவர்களை அருகில் வைத்துக்கொண்டு ஊழலை ஒழிப்பேன் என்று பேசுகிறார்.



மீண்டும் மீண்டும் அவர் சொல்ல வரும் நரேட்டிவ் திராவிட முன்னேற்ற கழகம் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பது. அதே போல கரூர்ல நடந்த சம்பவத்திற்கு திராவிட முன்னேற்ற கழகம் தான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

அவர் பேசும் போது தெரிந்தோ தெரியாமலோ அவருடைய ஸ்கிரிப்ட் ரைட்டர் கொடுத்ததை அப்படியே பேசியிருக்கிறார். ஒரு முதலமைச்சராக பதவி ஏற்றிருக்கிறோம் என்ற எண்ணம் இன்னும் அவருக்கு இல்லை. தற்போது தான் ஒரு முதலமைச்சர் என்ற நினைவே இன்றி பேசி இருக்கிறார்.

முதல்வராகிய அவருக்கு கீழ் இருக்கும் காவல்துறையை இன்றைக்கு அவரே குற்றம் சாட்டி பேசியிருக்கிறார். காவல்துறை என்பது ஒரு இன்ஸ்டிடியூஷன், அது எப்போதும் இருக்கும், யார் ஆட்சிக்கு வந்தாலும் இருக்கும்.

**கரூரிலிருந்து சென்னைக்கு ஓடி வந்தது யார்?**

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஆதாரமில்லாமல் காவல்துறையை பற்றி பேசலாம், ஏன் என்றால் அவர் ஏற்கனவே 'புரட்சி வெடிக்கும், ஜென்சி புரட்சி வெடிக்கும்' என்று பதிவு போட்டுவிட்டு அதற்கு ஜாமீன் கேட்டு கோர்ட்டுக்கு போகும்போது தன்னை பற்றி ஒரு தகவலை நீதிமன்றத்தில் கூறி இருப்பார். ஆகவே அதே தகவலை இப்போதும் கூறி தப்பித்துக் கொள்வார்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

### கரூரில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்காமல் – தனி விமானம் பிடித்து

# ஓடு.. ஓடு.. என்று தலைதெறிக்க ஓடியது யார்?

## முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு - முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கேள்வி!





சென்னை, ஜூலை 12-

முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தமது சமூக வலை தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

கடந்த வருடம் செப்டம்பர் 27 அன்று நடந்த கரூர் துயரச் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட, எனது உயிரில் கலந்த கரூர் மக்களுக்காக களத்தில் துணை நின்று காப்பாற்றியது யார்? எனது கரூர் சொந்தங்களுக்காக இரவு பகல் பாராமல் முன் நின்று உதவியது யார்?

மேலும், செய்தி கிடைத்த உடனேயே கரூருக்கு விரைந்து வந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, உடனடி உயர் சிகிச்சை கிடைக்க அனைத்துத் தேவையான ஏற்பாடுகளையும் செய்து, அவர்களின் உயிரைக் காத்து, துயரைத் துடைத்தவர்கள் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும், அன்றைய தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும்.

அன்றைய கூட்டத்தில், பெருமளவில் மக்கள் பாதிக்கப்பட்டு மயங்கி விழுந்த அந்த அசாதாரண சூழ்நிலையிலும், தண்ணீர் பாட்டிலை வீசிவிட்டு, ஆம்புலன்ஸை வரச் சொல்லிவிட்டு, மக்களைக் காப்பாற்றாமல், தனது பேச்சை தொடர்ந்து பேசியது யார்?

திருச்சி விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் அத்தனை பேர் இறந்துள்ளதாகக் கூறியும், பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்காமல், தனி விமானம் பிடித்து ஓடு. ஓடு.. ஓடு... என ஓடியது யார் என்பது எனது கரூர் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பதிவிட்டுள்ளார்.

### 127 தொகுதிகளில் 'கொத்து புரோட்டா' போடப்பட்டுள்ளது!

# ஊழல்வாதிகளை கட்சியில் சேர்த்தது என்ன தூய சக்தியா? துர்நாற்ற சக்தியா? சி.எம்.சார்!

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*சென்னை, ஜூலை 12 -*

*முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இன்று கரூரில் விஜய் பேசும் போது ஆணவத்தோடு கொளத்தூரில் 5 நிமிடம் பேசினேன் முன்னாள் முதல்வரை கொத்து புரோட்டா போட்டு விட்டேன் என்று சொல்லும் முதல்வர் அவர்களே, தேர்தலுக்கு முன் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் த.வெ.க சார்பாக இந்த விஜய் தான் போட்டியிடுகிறேன் என்று கெத்தாக சொன்ன உங்களுக்கும் 127 தொகுதிகளில் மு.க.ஸ்டாலின் கொத்து புரோட்டா போட்டதை மறந்துவிட்டீர்களா? என்று சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.*



*முன்னாள் சபாநாயகர் மு.அப்பாவு சமூக வலை தளப் பதிவு வருமாறு: -*

*முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இன்று கரூரில் விஜய் பேசும் போது ஆணவத்தோடு கொளத்தூரில் 5 நிமிடம் பேசினேன் முன்னாள் முதல்வரை கொத்து புரோட்டா போட்டு விட்டேன் என்று சொல்லும் முதல்வர் அவர்களே, தேர்தலுக்கு முன் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் த.வெ.க சார்பாக இந்த விஜய் தான் போட்டியிடுகிறேன் என்று கெத்தாக சொன்ன உங்களுக்கும் 127 தொகுதிகளில் மு.க.ஸ்டாலின் கொத்து புரோட்டா போட்டதை மறந்துவிட்டீர்களா?*

*கரூர் பிரச்சாரக் கூட்டத்திற்கு 12.30 மணிக்கு விஜய் வருவார் என்று உங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பத்திரிகை பேட்டியில் கூறியது உங்களுக்கு நினைவிருக்கிறதா ? 7 மணி நேரம் கால தாமதமாக கரூர் வந்து 20 நிமிடம் தாங்கள் பேசிய காணொளியை நினைவுபடுத்தி*

*41 பேர் இறப்பிற்கு யார் காரணம் என்பதை உங்கள் மனசாட்சியிடமே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.*

*உங்களை போன்று பழி வாங்கும் எண்ணம் இருந்தால் உங்கள் மீது வழக்குப் பதிவு செய்திருப்பார் ஆனால் மு.க.ஸ்டாலின் அரசியலில் எப்போதும் கண்ணியத்தை கடைப்பிடிப்பவர்.*

*தீய சக்தியும் தீர்ந்து போன சக்தியும் இரண்டும் ஊழலில் ஒன்றுதான் என்று கரூரில் பேசிய CM sir, தீர்ந்து போன கட்சியில் ஊழல் செய்தவர்களை தொடர்ந்து உங்கள் கட்சியில் சேர்த்து கொள்வது தூய சக்தியா? அல்லது தூர்நாற்ற சக்தியா?*

*CM sir, இது ஜனநாயக நாடு. மக்கள் தான் எஜமான்கள். விரைவில் காலமும் மாறும்! காட்சிகளும் மாறும்! ஆட்சியும் மாறும்!*

*இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் பதிவிட்டுள்ளார்.*